(47)

162565

1979-11-21

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

---

# 1979 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க, கடற்றொழில் (வெளிநாட்டு மீன்பிடி வள்ளங்களை ஒழுங்குபடுத்தல்) சட்டம்.

---

[1979, செத்தெம்பர் மாதம் 25 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1979, செத்தெம்பர் மாதம் 28 ஆம் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

விலை : ரூபா 1.30 தபாற் செலவு : சதம் 50

# 1979 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க, கடற்றெழில் (வெளிநாட்டு மீன்பிடி வள்ளங்களை ஒழுங்குபடுத்தல்) சட்டம்

[1979, செத்தெம்பர் மாதம் 25 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஒ. 66/77

**இலங்கை நீர்ப்பரப்பில் வெளிநாட்டு வள்ளங்களினுல் மேற்கொள்ளப்படும் மீன்பிடி நடவடிக்கைகளையும் அவற்றேடு தொடர்புபட்ட நடவடிக்கைகளையும் ஒழுங்குபடுத்திக் கட்டுப்படுத்தி முகாமைசெய்வதற்கும், அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினுல் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**1.** இச்சட்டம் 1979 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க, கடற்றெழில் (வெளிநாட்டு மீன்பிடி வள்ளங்களை ஒழுங்குபடுத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப்பெயர்.*

## பாகம் I— நிருவாகம்

**2.** இச்சட்டத்தை நிருவகிப்பதற்கும் அத்துடன் அதன் ஏற்பாடுகளைச் செயற்படுத்தி வலுவுக்கிடுவதற்கும் பணிப்பாளர் பொறுப்பாக இருத்தல் வேண்டும். *சட்டத்தை நிருவகித்தல்.*

**3.** இந்தச் சட்டம் முறையாக வலுவுக்கிடப்படுதலை உறுதிப்படுத்துவதற்கும், வெளிநாட்டு மீன்பிடி வள்ளங்கள் இலங்கை நீர்ப்பரப்பில் மேற்கொள்ளும் மீன்பிடி நடவடிக்கைகள் மீதும் மீன்பிடியோடுறவுபட்ட நடவடிக்கைகள் மீதும் செவ்வையான ஒரு கண்காணிப்பு ஒழுங்குமுறையைத் தாபித்துப் பேணிவருவதற்கும் தேவைப்படக்கூடிய அத்தகைய எல்லா வகையான உதவிகளையும் ஆயுதந்தாங்கிய படைகளின் ஏவுநர்கள் வழங்குதல் வேண்டும். *இந்தச் சட்டத்தைச் செயற்படுத்துவதிலும் வலுவுக்கிடுவதிலும் ஆயுதந்தாங்கிய படையினர் ஒத்துழைத்தல்.*

## பாகம் II—இலங்கை நீர்ப்பரப்பில் வெளிநாட்டு மீன்பிடி வள்ளங்கள் மேற்கொள்ளும் மீன்பிடி நடவடிக்கைகள், மீன்பிடியோடுறவுபட்ட நடவடிக்கைகள் என்பன மீதான கட்டுப்பாடு

**4.** பன்னிரண்டாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, 6 ஆம் பிரிவினுல் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமொன்றின் அதிகாரத்தின்கீழன்றி, வெளிநாட்டு மீன்பிடி வள்ளம் எதுவும், இலங்கை நீர்ப்பரப்பில் மீன்பிடி நடவடிக்கைகளுக்கோ மீன்பிடியோடுறவுபட்ட நடவடிக்கைகளுக்கோ பயன்படுத்தப்படுதலாகாது. *வெளிநாட்டு மீன்பிடிவள்ளங்களின் மீன்பிடி நடவடிக்கைகளையும் மீன்பிடியோடுறவுபட்ட நடவடிக்கைகளையும் தடைசெய்தல்.*

2—ஏ 43691—6,800 (08/79)

அனுமதிப்பத்திர மின்றி இலங்கை நீர்ப்பரப்புக்குள் நுழையும் வெளிநாட்டு மீன்பிடிவள்ளங்கள் அவற்றின் கருவிதளவாடங்களைத் தொடக்கறுத்து வைத்தல் வேண்டும்.

**5.** ஆறும் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமொன்றன் அதிகாரத்தின் கீழன்றி வேறுவகையில் வெளிநாட்டு மீன்பிடிவள்ளம் எதுவும் இலங்கை நீர்ப்பரப்பினுள் நுழைகின்றவிடத்து, அத்தகைய வள்ளத்தின் மீன்பிடிக் கருவிதளவாடம், அவ்வள்ளம் அத்தகைய நீர்ப்பரப்பினுள் நிற்கின்றவரைக்கும், விதித்துரைக்கப்பட்ட முறையில் தொடக்கறுத்து வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

வெளிநாட்டு மீன்பிடிவள்ளத்துக்கான அனுமதிப்பத்திரங்கள்.

**6.** (1) பணிப்பாளர், அல்லது அவரால் சிறப்பாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள், அமைச்சரின் அங்கீகாரத்துடன் அதற்கெனச் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் பேரிலும், விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்திய தன்மேலும், ஏதேனும் வெளிநாட்டு மீன்பிடிவள்ளம் தொடர்பில் அனுமதிப்பத்திரமொன்றை வழங்கி அத்தகைய வள்ளம், அத்தகைய அனுமதிப்பத்திரத்தில் குறித்துரைக்கப்படக்கூடிய இலங்கை நீர்ப்பரப்பின் அத்தகைய பிரதேசத்திலும் அல்லது பிரதேசங்களிலும் அத்தகைய காலப் பகுதிகளிலும் அத்தகைய மீன்பிடி நடவடிக்கைகளுக்கும் மீன்பிடியோடுறவுபட்ட நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்படலாம் என அதிகாரமளிக்கலாம். அத்தகைய ஒவ்வோர் அனுமதிப்பத்திரமும் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் இருத்தல் வேண்டும்.

(2) அனுமதிப்பத்திரத்துக்கான ஒவ்வொரு விண்ணப்பமும் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் பணிப்பாளருக்குச் செய்யப்பட வேண்டுமென்பதுடன், அது விதித்துரைக்கப்பட்ட விபரங்களைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

இலங்கை மீனவர்களும் உள்ளூர் மீன்பிடி வள்ளங்களும் மீன்பிடிப்பதற்கென்று இலங்கை நீர்ப்பரப்பின் குறிப்பிட்ட பிரதேசங்களை அமைச்சர் ஒதுக்கிவைக்கலாம்.

**7.** (1) இலங்கை மீனவரும் உள்ளூர் மீன்பிடி வள்ளங்களும் மீன்பிடிப்பதற்கென, ஒதுக்கிவைக்கப்படவேண்டுமென இலங்கை நீர்ப்பரப்பின் குறிப்பிட்ட பிரதேசங்களை அமைச்சர் விதித்துரைக்கலாம்.

(2) ஆறும் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் எதுவும், இப்பிரிவின் நோக்கங்களுக்காக விதித்துரைக்கப்பட்ட ஏதேனும் பிரதேசத்தில் வெளிநாட்டு மீன்பிடி வள்ளம், மீன்பிடி நடவடிக்கையை அல்லது மீன்பிடியோடுறவுபட்ட நடவடிக்கையை மேற்கொள்ள அதிகாரமளித்தலாகாது அல்லது அவ்வாறு மேற்கொள்வதற்குச் செல்லுபடி கொண்டதாகாது.

வெளிநாட்டு மீன்பிடிவள்ள அனுமதிப் பத்திரங்களின் நிபந்தனைகள்.

**8.** ஆறும் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் ஒவ்வொன்றும், விதித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய நிபந்தனைகளுக்கு அமைந்ததாகவும் அத்துடன், அத்தகைய அனுமதிப்பத்திரம் எவ்வளவு காலத்துக்கென வழங்கப்படுகின்றதென்பதையும், அத்தகைய வெளிநாட்டு மீன்பிடிவள்ளம் மீன்பிடி நடவடிக்கைகளுக்கும், மீன்பிடியோடுறவுபட்ட நடவடிக்கைகளுக்கும் எவ்வளவு பிரதேசத்தைப் பயன்படுத்தலாம் என அவ்வனுமதிப்பத்திரத்தால் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது என்பதையும், அத்தகைய வள்ளத்தால் பயன்படுத்தப்படும் மீன்பிடி முறை என்ன என்பதையும்,

அத்தகைய வள்ளத்தால் பயன்படுத்தப்படும் கருவிதளவாடத்தின் வகையையும் கவனத்திற்கொண்டு பார்க்கும்போது அவ்வனுமதிப் பத்திரத்தோடு பிணைத்தல் தக்கதெனப் பணிப்பாளர் கருதக்கூடிய அத்தகைய வேறு நிபந்தனைகளுக்கமைந்ததாகவும் (இவ்வேறு நிபந்தனைகள் இதனகத்துப்பின்னர் "சிறப்பு நிபந்தனைகள்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இருத்தல் வேண்டும்.

*அனுமதிப் பத்திரத்தில் உள்ள குறித்த சில நிபந்தனைகளை வேறுபடுத்துவதற்குப் பணிப்பாளருக்குள்ள தத்துவம்.*

9. (1) இலங்கை நீர்ப்பரப்பில் கடற்றொழிலை முறையாக முகாமை செய்வதற்காக, 6 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் அனுமதிப்பத்திரத்தோடு பிணைக்கப்பட்ட எவையேனும் சிறப்பு நிபந்தனைகளை வேறுபடுத்துதல் அவசியமானதென அல்லது உகந்ததெனப் பணிப்பாளர் திருப்தியடைகின்றவிடத்து, அவர் அவற்றை அவ்வாறு வேறுபடுத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவினால் அவர்க்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைப் பின்பற்றி, 6 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் அனுமதிப்பத்திரத்துடன் பிணைக்கப்பட்ட ஏதேனும் சிறப்பு நிபந்தனையைப் பணிப்பாளர் வேறுபடுத்துகின்றவிடத்து, அவர், அத்தகைய வேறுபடுத்தல் பற்றி அந்த அனுமதிப்பத்திரத்தையுடையாருக்கு, வசதியான அளவு விரைவில் அறிவித்தல் கொடுப்பித்தல் வேண்டும்.

*அனுமதிப் பத்திரங்களை இடைநிறுத்துவதற்கு அல்லது இல்லாதாக்குவதற்குப் பணிப்பாளருக்கிருக்கும் தத்துவம்.*

10. (1) பின்வரும் சூழ்நிலைகளில் பணிப்பாளர் 6 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் அனுமதிப்பத்திரத்தை இடைநிறுத்திவைக்கின்ற கட்டளையை ஆக்கலாம் அல்லது அந்த அனுமதிப்பத்திரத்தை இல்லாதாக்கலாம் :—

(அ) அந்த அனுமதிப்பத்திரம் எந்த வெளிநாட்டு மீன்பிடி வள்ளம் தொடர்பில் வழங்கப்பட்டதோ அது, இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாகப் பயன்படுத்தப்பட்டதென அல்லது இந்தச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிக்கு முரணாக அல்லது அத்தகைய அனுமதிப்பத்திரத்தோடு பிணைக்கப்பட்ட ஏதேனும் நிபந்தனைக்கு முரணாகப் பயன்படுத்தப்பட்டதென அவர் திருப்தியடைகின்றவிடத்து ;

(ஆ) இலங்கை நீர்ப்பரப்பில் கடற்றொழிலை முறையாக முகாமை செய்வதற்கு அத்தகைய நடவடிக்கை அவசியமானதென அல்லது உகந்ததென அவர் திருப்தியடைகின்றவிடத்து,

இவ்வுட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் ஒவ்வொரு கட்டளையிலும் அதற்கான ஏதுக்கள் எடுத்துக்கூறப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட ஏதுக்காக ஏதேனும் அனுமதிப்பத்திரம் இடைநிறுத்திவைக்கப்பட்டுள்ளவிடத்து அல்லது இல்லாதாக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய அனுமதிப்பத்திரத்துக்கெனச் செலுத்தப்பட்டதும், அந்த அனுமதிப்பத்திரம் எந்தக் காலப்பகுதிக்கென வழங்கப்பட்டதோ அந்தக் காலப்பகுதியின் முடிவுறுதெஞ்சியுள்ள காலப்பகுதியைக் குறித்து நிற்பதுமான கட்டணத்தின் அத்தகைய விகிதாசாரத்தொகை, அனுமதிப்பத்திரமுடையாரின் வேண்டுதலின்

பேரில் அவரிடம் மீளவளிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய வேண்டுகை எதுவும் எழுத்திலிருத்தலும், பணிப்பாளரை விளித்தெழுதப்படலும் வேண்டும் என்பதோடு, கீழ்க்குறிப்பிட்ட காலத்துக்குள் செய்யப்படுதலும் வேண்டும் ; அதாவது—

(அ) அனுமதிப்பத்திரத்தை இடைநிறுத்தும் அல்லது இல்லாதாக்கும் கட்டளை ஆக்கப்பட்ட தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள் செய்யப்படுதல் வேண்டும் ; அல்லது

(ஆ) அனுமதிப்பத்திரத்தை இடைநிறுத்தும் அல்லது இல்லாதாக்கும் ஒரு கட்டளைக்கெதிராக மேன்முறையீடொன்று அமைச்சருக்குச் செய்யப்படுகின்றவிடத்து, அத்தகைய மேன்முறையீட்டினை அமைச்சர் முடிவுசெய்த தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் செய்யப்படுதல் வேண்டும்.

**அமைச்சருக்கு மேன்முறையீடு செய்தல்.**

11. (1) பிரிவு 10 (1) இன் கீழ்ப் பணிப்பாளரால் ஆக்கப்பட்ட ஒரு கட்டளையினுல் இன்னலுறும் எவரேனும் ஆள், அத்தகைய கட்டளை ஆக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள்ளாக அத்தகைய கட்டளைக்கெதிராக அமைச்சருக்கு மேன்முறையீடு செய்யலாம். அத்தகைய ஏதேனும் மேன்முறையீட்டில் அமைச்சர் செய்யும் முடிவு இறுதியானதாதல் வேண்டும்.

(2) பிரிவு 9 (1) இன் கீழ்ப் பணிப்பாளரால் ஆக்கப்பட்ட வேறுபடுத்தல் எதையும் அல்லது 10 (1) ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட இடைநிறுத்தற்கட்டளை எதையும் அல்லது இல்லாதாக்கற் கட்டளை எதையும் அல்லது (1) ஆம் உட்பிரிவின் கீழான அமைச்சரின் முடிவு எதையும், விடயத்துக்கேற்ப அத்தகைய வேறுபடுத்தல், இடைநிறுத்தல் அல்லது இல்லாதாக்கல் இலங்கை நீர்ப்பரப்பில் கடற்றெழிலை முறையாக முகாமை செய்வதற்கு அவசியமானதாக அல்லது உகந்ததாக இருக்கவில்லை என்ற ஏதுவின் அடிப்படையில் நீதிமன்றம் எதிலும் கேள்விக்குட்படுத்துதல் ஆகாது.

**ஆராய்ச்சி நோக்கங்களுக்காக அல்லது அறிவியல் நோக்கங்களுக்காக மீன்பிடித்தல்.**

12. (1) இலங்கை நீர்ப்பரப்பில் உள்ள கடற்றெழில் வளங்கள் பற்றிய ஆராய்ச்சித் தொழிற்பாடுகளுக்கென, பரீட்சார்த்த மீன்பிடிக்கென அல்லது அறிவியல் நுண்ணாய்வுகளுக்கென ஏதேனும் வெளிநாட்டு மீன்பிடி வள்ளத்தைப் பயன்படுத்தலாமென அதிகாரமளிக்கும் எழுத்திலான அனுமதியைப் பணிப்பாளர் வழங்கலாம்.

(2) ஓராமுட்பிரிவின்கீழ் தமது எழுத்திலான அனுமதியை வழங்கும்போது, பணிப்பாளர், அத்தகைய வள்ளத்தைப் பயன்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள அத்தகைய ஆராய்ச்சித் தொழிற்பாடுகளை நடாத்துதல் தொடர்பில் அல்லது பரீட்சார்த்த மீன்பிடி தொடர்பில் அல்லது அறிவியல் நுண்ணாய்வுகள் தொடர்பில் தக்கதென அவர் நினைக்கும் அத்தகைய நிபந்தனைகளைப் பிணிக்கலாம்.

(3) நான்காம் பிரிவில் அல்லது 5 ஆம் பிரிவில் அடங்கியுள்ள தெதுவும், (1) ஆம் உட்பிரிவின்கீழ் பணிப்பாளரால் வழங்கப்பட்ட எழுத்திலான அனுமதிக்கிணங்கவும், அந்த அனுமதியின் அதிகாரத்தின்கீழும் தொழிற்படும் ஏதேனும் வள்ளத்துக்கு ஏற்புடையதாகாது.

(4) எழுத்திலான அனுமதியை அழித்தல் அல்லது வேறுபடுத்தல் பொதுநலன்கருதி அவசியமானதெனப் பணிப்பாளர் கருதுகின்றவிடத்து, (1) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட எழுத்திலான ஏதேனும் அனுமதியைப் பணிப்பாளர் எந்த நேரத்திலும் அழிக்கலாம் அல்லது அத்தகைய அனுமதியோடு பிணைக்கப்பட்ட நிபந்தனைகளை வேறுபடுத்தலாம்.

## பாகம் III—அதிகாரம்பெற்ற அலுவலர்களின் தத்துவங்கள்

*அதிகாரம்பெற்ற அலுவலர்களின் தத்துவங்கள்.*

**13.** (1) இச்சட்டத்தை வலுவுக்கிடும் நோககங்களுக்காக அதிகாரம்பெற்ற அலுவலர் எவரும் பின்வருவனவற்றுள் எவற்றையும் செய்யலாம் :—

(அ) இலங்கை நீர்ப்பரப்பிலுள்ள ஏதேனும் வெளிநாட்டு மீன்பிடி வள்ளத்தை நிறுத்தி, உள்நுழைந்து, தேடுகையிடலாம் ;

(ஆ) வைத்திருக்கப்படவேண்டுமென அல்லது பேணிவரப்படவேண்டுமென இச்சட்டத்தால் அல்லது இச்சட்டத்தின் கீழ்த் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் அனுமதிப்பத்திரத்தை, சம்பவக்குறிப்பேட்டை அல்லது வேறு ஆவணத்தைக் காண்பிக்குமாறு பணிக்கலாம், பரிசோதிக்கலாம் அத்துடன் அவற்றின் பிரதிகளை எடுக்கலாம்;

(இ) வள்ளத்துக்குள் உள்ள அல்லது வள்ளத்துக்குச் சொந்தமான எவையேனும் மீன்பிடி வலைகளை அல்லது வேறு மீன்பிடிக் கருவிதளவாடங்களைக் காண்பிக்குமாறு பணிக்கலாம் என்பதுடன், அவற்றைப் பரிசோதிக்கலாம் ; அத்துடன் வள்ளத்துக்குள் இருக்கும் ஏதேனும் மீனை அல்லது நீர்வாழ் தாவரத்தைச் சோதனையிடலாம் ; அத்துடன்

(ஈ) இச்சட்டத்தின்கீழ்த் தவறெதுவும் புரியப்பட்டுள்ளதா என்பதை நிச்சயிப்பதற்குத் தேவையாக இருக்கக்கூடிய அத்தகைய விசாரணைகளை, வள்ளத் தலைவரிடமிருந்து அல்லது மாலுமிகளிடமிருந்து செய்யலாம்.

(2) இந்தச் சட்டத்தின்கீழ்த் தவறொன்று புரியப்பட்டுள்ளதென்று நம்புவதற்கு அதிகாரம்பெற்ற அலுவலர் எவருக்கும் நியாயமான ஏதுக்கள் இருக்கின்றவிடத்து, அவர், பிடியாணை இருந்தாலுஞ்சரி இல்லாவிட்டாலுஞ்சரி—

(அ) அந்தத் தவறைப் புரிவதில் அல்லது புரிதல் தொடர்பில் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் வள்ளத்தையும் அந்த வள்ளத்துக்குள் காணப்படுவனவும் அல்லது

அந்த வள்ளத்துக்குச் சொந்தமானவையுமான ஏதேனும் மீன்பிடிக் கருவிதளவாடத்தையும், மீனையும், அல்லது நீர்வாழ் தாவரத்தையும், சாதனங்களையும், களஞ்சியப் பொருட்களையும் கப்பற்சரக்கையும் கைப்பற்றித் தடுத்துவைக்கலாம், அல்லது அந்த வள்ளத்தினால் கைவிடப்பட்ட ஏதேனும் மீன்பிடிக் கருவிதளவாடத்தைக் கைப்பற்றலாம் ; அத்துடன்,

(ஆ) அத்தகைய தவறைப் புரிந்துள்ளாரென்று நம்புவதற்குக் காரணம் இருக்கும் எவரேனும் ஆளைக் கைதுசெய்யலாம்.

(3) இப்பிரிவின்கீழ் வள்ளமொன்றைக் கைப்பற்றும்போது அதிகாரம்பெற்ற அலுவலர் ஒருவர் நியாயமான அளவில் தேவைப்படக்கூடிய அத்தகைய வலோற்காரத்தைப் பிரயோகிக்கலாம்.

(4) இப்பிரிவின்கீழ்க் கைப்பற்றப்பட்ட ஏதேனும் வெளிநாட்டு மீன்பிடி வள்ளமும், அதன் மாலுமிகளும் இலங்கையின் மிக அண்மையிலுள்ள அல்லது மிகவசதியான துறைமுகத்துக்குக் கொணரப்படுதல் வேண்டும்.

(5) ஏதேனும் வெளிநாட்டு மீன்பிடி வள்ளம் அல்லது வேறு பொருள் இந்தப் பிரிவின்கீழ்க் கைப்பற்றப்படுகின்றவிடத்து, அத்தகைய வள்ளத்தை அல்லது வேறு பொருளைக் கைப்பற்றிய அதிகாரம்பெற்ற அலுவலர், இயன்றளவு விரைவாக அவ்வள்ளத்தை அல்லது வேறு பொருளை ஒரு மேல் நீதிமன்றத்தின் நீதிபதி முன்னர் கொணருதல் வேண்டும் அல்லது அந்த மேல் நீதிமன்ற நீதிபதியால் சோதனையிடப்படக் கூடியதாக ஆக்குதல் வேண்டும்; அந்த வள்ளம் அல்லது வேறு பொருள் தொடர்பில் குற்றவழக்குத் தொடுக்கப்பட்டு அவ்வழக்கு முடிவடையும்வரை, அத்தகைய வள்ளத்தை அல்லது வேறு பொருளைத் தடுத்துவைத்தல் தொடர்பில் அல்லது கட்டுக்காவலில் வைத்தல் தொடர்பில் தக்கதென அவர் நினைக்கும் அத்தகைய கட்டளையை மேல் நீதிமன்ற நீதிபதி ஆக்கலாம் :

ஆயின், எவ்வாறுயினும், அவ்வாறு கைப்பற்றப்பட்ட ஏதேனும் மீன் அல்லது நீர்வாழ் தாவரம் எளிதில் அழுகிப் போகக்கூடிய ஒன்றாக இருந்தால், அதிகாரம்பெற்ற அலுவலர் ஒருவர், பணிப்பாளரின் அல்லது அரசாங்க அதிபரின் பணிப்பின்பேரில் அத்தகைய மீனை அல்லது நீர்வாழ் தாவரத்தை விற்றுவிடலாம் என்பதுடன், விற்றுவரவுகளை அத்தகைய மேல் நீதிமன்றத்தில் வைப்பிலிடுதலும் வேண்டும்.

(6) இப்பிரிவின்கீழ்க் கைதுசெய்யப்படும் ஒவ்வோர் ஆளுக்கும், அவர் கைதுசெய்யப்படுவதற்கான காரணம் கூறப்படுதல் வேண்டுமென்பதுடன், (பிடியாணையின்கீழான கைதின் விடயத்தில் அத்தகைய பிடியாணையில் இருக்கக்கூடிய ஏதேனும் புறக்குறிப்புக்கமைய) கைதுசெய்த இடத்திலிருந்து மேல் நீதிமன்ற நீதிபதியிடம் போவதற்குத் தேவைப்படும் நேரம் நீங்கலாக இருபத்து நான்கு மணித்தியாலங்களுக்குள் அவர் மேல் நீதிமன்ற நீதிபதியொருவரின் முன்னிலைக்குக் கொணரப்படுதலும் வேண்டும்.

(7) இச்சட்டத்தின்கீழான அல்லது கடற்றெழில் பற்றிய வேறே தேனும் சட்டத்தின்கீழான தவறென்று இலங்கை நீர்ப்பரப்பில் நிற்கும் வெளிநாட்டு மீன்பிடி வள்ளமொன்றினுல் புரியப்பட்டதைத் தொடர்ந்து, அத்தகைய வெளிநாட்டு மீன்பிடி வள்ளம் இலங்கை நீர்ப்பரப்பின் எல்லைக்கப்பால் துரத்திச் செல்லப்படுகின்றவிடத்து, அதிகாரம்பெற்ற அலுவலர்களுக்கு இப்பிரிவால் வழங்கப்பட்ட தத்துவங்கள், சருவதேசச் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட அந்தச் சூழ்நிலைகளிலும், அந்த அளவுக்கும் இலங்கை நீர்ப்பரப்பின் எல்லைகளுக்கு வெளியேயும் பிரயோகிக்கப்படலாம்.

செயலுக்கான பாதுகாப்பு.

14. (1) இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டைப் பின்பற்றி நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யும்படி கட்டளையிடப்பட்ட ஏதேனும் செயலுக்காகச் சேதஈடுகோரும் வழக்கெதுவும் இலங்கை அரசாங்கத்துக்கெதிராகவோ அல்லது எவரேனும் அதிகாரம்பெற்ற அலுவலர்க்கெதிராகவோ குடியியல் நீதிமன்ற மெதிலும் தொடுக்கப்படுதலாகாது.

(2) இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டைப் பின்பற்றிச் செய்வதாகக் கருதி எவரேனும் அதிகாரம்பெற்ற அலுவலரால் செய்யப்பட்ட ஏதேனும் செயலுக்காக, அத்தகைய அலுவலர்க்கெதிராகத் தொடுக்கப்படும் குற்றவழக்கெதுவும், அவ்வழக்கானது, முறைப்பாடு செய்யப்பட்ட செயல் புரியப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள்ளாகத் தொடுக்கப்பட்டிருந்தாலன்றி, நீதிமன்றமெதாலும் ஏற்றுக்கவனிக்கப்படுதலாகாது.

## பாகம் IV—தவறுகள்

4 ஆம் அல்லது 5 ஆம் பிரிவின் ஏற்பாடுகளை மீறுதல் தவறென்ருகும்.

15. ஏதேனும் வெளிநாட்டு மீன்பிடி வள்ளம் 4 ஆம் அல்லது 5 ஆம் பிரிவின் ஏற்பாடுகளை மீறிப் பயன்படுத்தப்படுகின்றவிடத்து, அத்தகைய வள்ளத்தின் தலைவரும், சொந்தக்காரரும் அதனை வாடகைக்கமர்த்தியவர் எவரேனும் இருப்பின் அவரும், தனித்தனியே இச்சட்டத்தின்கீழ்த் தவறென்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், யூரர்சபை இல்லாது அமரும் மேல் நீதிமன்ற நீதிபதி ஒருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், அவர்கள் ஒவ்வொருவரும்—

(அ) 4 ஆம் பிரிவை மீறியவராயிருப்பின் பதினைந்து இலட்சம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணம் செலுத்த ஆளாதல் வேண்டும் ; அல்லது

(ஆ) 5 ஆம் பிரிவை மீறியவராயிருப்பின் ஏழரை இலட்சம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணம் செலுத்த ஆளாதல் வேண்டும்.

அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகாமை தவறென்ருதல்.

16. ஆரும் பிரிவின்கீழான அனுமதிப்பத்திரமொன்று வழங்கப்பட்ட ஏதேனும் வெளிநாட்டு மீன்பிடிவள்ளம், அத்தகைய அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனைகளை மீறிப் பயன்படுத்தப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய வள்ளத்தின் தலைவரும், சொந்தக்காரரும் அதனை வாடகைக்கமர்த்தியவர் எவரேனும் இருப்பின் அவரும், தனித்தனியே இச்சட்டத்தின்கீழ்த் தவறென்றுக்குக்

குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், யூரர் சபை இல்லாது அமரும் மேல் நீதிமன்ற நீதிபதியொருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஏழரை இலட்சம் ரூபாவுக்கு மேற்படாத ஒரு குற்றப்பணத்தைச் செலுத்த ஆளாதலும் வேண்டும்.

*அதிகாரம் பெற்ற அலுவலர்களைத் தடைசெய்தல் முதலியன.*

**17.** எவரேனும் ஆள்—

(அ) அதிகாரம்பெற்ற அலுவலர் ஒருவருக்கு இந்தச் சட்டத்தால் அளிக்கப்பட்ட எவையேனும் தத்துவங்களை அவ்வலுவலர் பிரயோகிக்கும்போது அவரை வேண்டுமென்றே தடைசெய்தால் ; அல்லது

(ஆ) (i) இந்தச் சட்டத்தால் அல்லது இந்தச் சட்டத்தின் கீழ்ப் பேணப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் அனுமதிப்பத்திரத்தை சம்பவக் குறிப்பேட்டை அல்லது வேறு ஆவணத்தை அதிகாரம் பெற்ற அலுவலர் காண்பிக்குமாறு கேட்டவுடனும் காண்பிக்கத்தவறினல் ; அல்லது

(ii) ஒரு வெளிநாட்டு மீன்பிடி வள்ளத்துக்குள் இருக்கும் அல்லது அவ்வள்ளத்துக்குச் சொந்தமான எவையேனும் மீன்பிடிவலைகளை அல்லது மீன்பிடிக் கருவிதளவாடங்களை அதிகாரம்பெற்ற அலுவலர் காண்பிக்குமாறு கேட்டவுடனும் காண்பிக்கத் தவறினல் ; அல்லது

(இ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய அதிகாரம்பெற்ற ஓர் அலுவலரினல் செய்யப்பட்ட ஏதேனும் விசாரணையுடன் அல்லது தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகத் தவறினல்,

அவர், இச்சட்டத்தின்கீழான தவறென்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், யூரர்சபை இல்லாது அமரும் மேல்நீதிமன்ற நீதிபதி ஒருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் இருபத்தையாயிரம் ரூபாவுக்கு மேற்படாத ஒரு குற்றப்பணத்தைச் செலுத்த ஆளாதலும் வேண்டும்.

*இழப்பித்தற் கட்டளையை ஆக்க நீதிமன்றத்துக்குள்ள தத்துவம்.*

**18.** இந்தச் சட்டத்தின்கீழான ஒரு தவறுக்கு எவரேனும் ஆள் குற்றத்தீர்ப்பளிக்கப்படுகின்றவிடத்து, நீதிமன்றம்—

(அ) அந்தத் தவறைப் புரிவதில் அல்லது புரிதல் தொடர்பில் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் வள்ளமும் அதற்கான மீன்பிடிக் கருவிதளவாடமும், சாதனங்களும், களஞ்சியப் பொருட்களும், கப்பற்சரக்கும், அந்த வள்ளத்துக்குள் இருக்கும் ஏதேனும் மீனும் அல்லது நீர்வாழ் தாவரங்களும் அல்லது 13 (5) ஆம் பிரிவுக்கான காப்புவாசகத்தின்கீழ் அத்தகைய மீனின் அல்லது நீர்வாழ் தாவரத்தின் விற்றுவரவுகளாக உள்ளதும், 13 (5) ஆம் பிரிவுக்கான காப்புவாசகத்தின் கீழ் நீதி மன்றத்தில் வைப்பிலிடப்பட்டுள்ளதும் ஆன பணத்தொகையும் இழக்கப்படுதல் வேண்டும் எனக் கட்டளை ஆக்கலாம் ; 4 ஆம் பிரிவினை மீறியுள்ள விடயமாயின் மேற்கண்டவாறு கட்டளையை ஆக்குதல் வேண்டும்;

(ஆ) அத்தகைய வள்ளத்தைத் தடுத்துவைப்பதில் உறப்பட்ட எவையேனும் செலவுகளும், வள்ளத்தின் எவரேனும் மாலுமியை அல்லது மாலுமிகளைத் தன்னகமனுப்புதல் தொடர்பில் உறப்பட்ட எவையேனும் செலவுகளும் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளினால் கொடுபடற்பாலனவாதல் வேண்டும் எனக் கட்டளை ஆக்குதல்வேண்டும்.

இழப்பிக்கப்பட்ட பண்டங்களைக் கையுதிர்த்தல்.

**19.** (1) பதினெட்டாம் பிரிவின்கீழ் இழப்பிக்கப்பட்ட எதேனும் வள்ளம், மீன்பிடிக் கருவிதளவாடம், மீன், நீர்வாழ் தாவரம், சாதனங்கள், களஞ்சியப் பொருட்கள் அல்லது கப்பற் சரக்கு என்பன அவ்வாறு இழப்பிக்கப்பட்டவுடன் முற்றுமுழுதாக அரசுக்குரியனவாதல் வேண்டும் ; அத்தகைய உரித்தாக்கம்—

(அ) அந்த இழப்பித்தற் கட்டளைக்கெதிரான மேன்முறையீடொன்றை எத்தகைய காலத்துக்குள் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குச் செய்யமுடியுமோ அத்தகைய காலம் முடிவடைந்ததன்மேல் பயனுறுதல்வேண்டும் ; அல்லது

(ஆ) இழப்பித்தற் கட்டளைக்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடொன்று செய்யப்பட்டுள்ள விடத்து, இழப்பித்தற் கட்டளை உறுதிப்படுத்தப்படுவதன் மூலமோ அல்லது நிலைப்படுத்தப்படுவதன்மூலமோ அத்தகைய மேன்முறையீடு தீர்மானிக்கப்பட்டவுடன் பயனுறுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அரசுக்கு உரித்தாக்கப்பட்ட எதேனும் வள்ளம், மீன்பிடிக் கருவிதளவாடங்கள், மீன், நீர்வாழ் தாவரம், சாதனங்கள், களஞ்சியப்பொருட்கள் அல்லது கப்பற்சரக்கு ஆகியவற்றைப் பணிப்பாளர் தமதுடைமையிலெடுத்தல் வேண்டுமென்பதுடன், அவர் பொருத்தமானதெனக் கருதக்கூடியவாறு அவற்றை விற்கலாம் அல்லது வேறுவகையில் கையுதிர்க்கலாம்.

தவறுகளை இணக்கஞ் செய்தல்.

**20.** (1) தவறு புரியப்பட்ட சந்தருப்பங்களைக் கருத்திற்கொண்டும், அத்துடன், அமைச்சரின் அங்கீகாரத்துடனும், பணிப்பாளர் அல்லது பிரதிப் பணிப்பாளர் அல்லது எவரேனும் அரசாங்க அதிபர் அல்லது மேலதிக அரசாங்க அதிபர், இச்சட்டத்தின் கீழான எதேனும் தவறை, அத்தகைய தவறுக்காக விதிக்கப்படற்பாலதான ஆகக்கூடிய குற்றப்பணத்தின் ஐந்திலொரு பாகத்துக்குக் குறையாத ஒரு பணத்தொகைக்குச் சமமான ஒரு பணத்தொகைக்காக இணக்கஞ்செய்யலாமென்பதுடன், தவறிணக்கத்தின் ஓர் அம்சமாக, அமைச்சரின் அங்கீகாரத்துடன், 13 ஆம் பிரிவின் கீழ்க் கைப்பற்றப்பட்டதும், அது தொடர்பில் மேல் நீதிமன்ற நீதிபதியொருவரால் தடுத்துவைத்தற் கட்டளை ஆக்கப்பட்டிராததுமான எதேனும் வள்ளம், மீன் அல்லது வேறு பொருள் ஆகியவற்றின் மதிப்பிடப்பட்ட பெறுமதியினதும், வள்ளத்தைத் தடுத்துவைத்தலினாலும் அதனது மாலுமிகளைத் தன்னகமனுப்புவதினாலும் உறப்பட்ட செலவுகளினதும் கூட்டு மொத்தத்தை விஞ்சாத ஒரு பணத்தொகைக் கொடுப்பனவின் மேல் அந்த வள்ளத்தை, மீனை அல்லது வேறு பொருளை விடுவிக்கும்படி கட்டளையிடலாம்.

(2) இப்பிரிவின்கீழான ஏதேனும் தவறை இணக்குதல் —

(அ) இரு திறத்தவர்களாலும் கையொப்பமிடப்பட்டு எழுத்துமூலம் மேல் நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றவிடுதலையைப் பயனுக்கக் கொண்டிருத்தல் வேண்டும்.

முறி அல்லது வேறு பிணைப் பொறுப்புக்கொடுப்பதன் பேரில் வள்ளத்தை விடுவித்தல்.

21. (1) ஒரு வெளிநாட்டு மீன்பிடி வள்ளம் தொடர்பாகத் தொடுக்கப்பட்ட ஏதேனும் குற்றவழக்கு முடிவுறுதிருக்கையில் அவ்வள்ளத்தைத் தடுத்துவைத்தற்காக மேல் நீதிமன்ற நீதிபதியொருவர் கட்டளையிட்டிருக்குமிடத்து, வள்ளச் சொந்தக்காரர், அனுமதிப்பத்திரமுடையார், தலைவர் அல்லது அவ்வள்ளம் தொடர்பாக நியமிக்கப்பட்ட அதிகாரம்பெற்ற உள்ளூர்ப் பிரதிநிதி, இந்தப் பிரிவுக்கமைவாக ஒரு திருப்திகரமான முறியை ஏற்பாடு செய்வதன் மீது அல்லது வேறுதன்மையினதான பிணைப்பொறுப்பின் மீது வள்ளத்தின் விடுவிப்புக்காக அந்த நீதிபதிக்கு விண்ணப்பிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான விண்ணப்பமொன்று மேல் நீதிமன்றத்தின் எந்த நீதிபதிக்குச் செய்யப்படுகின்றதோ அவர், தம்மால் அங்கீகரிக்கப்பட்ட ஓர் ஆள் திருப்திகரமான முறியொன்றை அல்லது வேறு தன்மையினதான பிணைப்பொறுப்பை கீழே விபரிக்கப்பட்டவாறு எழுதி நிறைவேற்றுவதன்பேரில் அந்த வள்ளத்தை விட்டுவிடுமாறு கட்டளையிடலாம்; அதாவது வள்ளத்தின் பெறுமதியினதும் (இப்பெறுமதி மீன்பிடிக் கருவிதளவாடங்கள், சாதனங்கள், களஞ்சியப் பொருட்கள், கப்பற்சரக்கு என்பனவற்றின் பெறுமதியையும் உள்ளடக்கும்) கைப்பற்றப்பட்ட நேரத்தில் வள்ளத்துள் இருந்த மீன்களின் அல்லது நீர்வாழ் தாவரங்களின் பெறுமதியினதும் (இது, விற்கப்பட்ட எவையேனும் மீன்களின் அல்லது நீர்வாழ் தாவரங்களின் பெறுமதியாக உள்ளதும், 13 (5) ஆம் பிரிவுக்கான காப்புவாசகத்துக்கிணங்க நீதிமன்றத்தில் வைப்பிலிடப்பட்டதுமான தொகை நீங்கலானபெறுமதி) வள்ளத்தின் மாலுமிகளுள் ஒருவரையோ ஒருவருக்கு மேற்பட்டவர்களையோ தடுத்துவைப்பதிலும் தன்னகமனுப்புவதிலும் உறப்பட்ட செலவுகளினதும், அத்தகைய வள்ளத்தின் தலைவர், சொந்தக்காரர் அல்லது அவ்வள்ளத்தை வாடகைக்கமர்த்தியவர் எந்தத் தவறுக்காக அவர்க்கெதிராக குற்றவழக்கொன்று தொடுக்கப்பட்டுள்ளதோ அல்லது தொடுக்கப்படவுள்ளதோ அந்தத் தவறுக்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டால் எந்த ஆகக்கூடிய குற்றப்பணத்தைச் செலுத்த ஆளாவாரோ அந்த ஆகக்கூடிய குற்றப்பணத்தினதும் கூட்டுமொத்தத்துக்குக் குறையாத ஒரு பணத்தொகையில் திருப்திகரமான முறியொன்றை அல்லது வேறுதன்மையினதான பிணைப்பொறுப்பை எழுதி நிறைவேற்றிய தன்பேரில் அந்த வள்ளத்தை விட்டுவிடுமாறு கட்டளையிடலாம்.

(3) இந்தப் பிரிவின்கீழ் எழுதிநிறைவேற்றப்பட்ட ஏதேனும் முறியின் அல்லது வேறுதன்மையினதான பிணைப்பொறுப்பின் விடுவிப்பு பின்வரும் நிபந்தனையின் மீதானதாதல் வேண்டும்:—

(அ) இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிதலில் அல்லது புரிதல் தொடர்பாக அவ்வள்ளம் பயன்படுத்தப்படவில்லையென்பதான நீதிமன்றத்தின் துணிபொன்றன்மீது; அல்லது

(ஆ) (i) நீதிமன்றத்தால் விதிக்கப்படும் ஏதேனும் குற்றப் பணமும் 18 (ஆ) என்னும் பிரிவின் கீழ் செலுத்தப் படவேண்டுமெனக் கட்டளையிடப்பட்ட ஏதேனும் செலவுத் தொகையும் நீதிமன்றத் தீர்ப்பளிக்கப்பட்ட தேதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குள்ளாக முழுமையாகச் செலுத்தப்படுவதன்மீதும் ; அத்துடன்

(ii) இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப்புரிதலில் அல்லது புரிதல் தொடர்பாக அவ்வள்ளம் பயன்படுத்தப் பட்டுள்ளதென நீதிமன்றம் துணியுமிடத்து, வள்ளத்தின் பெறுமதிக்கு ஏதேனும் பங்க மேற்படாது (எல்லா மீன்பிடிக் கருவிதளவாடங்கள், சாதனங்கள், களஞ்சியப் பொருட்கள், கப்பற்சரக்கு அத்துடன் இழப் பிக்கப்படவேண்டுமெனக் கட்டளையிடப்பட்ட ஏதேனும் மீன் அல்லது நீர்வாழ் தாவரங்கள் உட்பட) வள்ளத்தை நீதிமன்றத்துக்கு அதன் கட்டளையின்பேரில் ஒப்படைப்பதன்மீதும் அல்லது நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டவாறான அதனது பணப்பெறுமதியை நீதிமன்றத்துக்கு அதன் கட்டளையின்பேரில் செலுத்துவதன் மீதும்.

(4) முறியை அல்லது வேறுதன்மையினதான பிணைப்பொறுப்பைக் கொடுக்கும் ஆள் அல்லது ஆட்கள், எந்நிபந்தனையின்மீது முறி விடுவிக்கப்பட்டுள்ளதோ அந்நிபந்தனையை முறையாக நிறைவேற்றியமையை எண்பித்தாலொழிய, முறியில் அல்லது வேறு தன்மையினதான பிணைப்பொறுப்பில் குறித்துரைக்கப்பட்ட பணத் தொகையானது, முறி அல்லது வேறு தன்மையினதான பிணைப் பொறுப்பு எந்த ஆளினால் அல்லது ஆட்களினால் கொடுக்கப்பட்டதோ அந்த ஆளினால் அல்லது ஆட்களினால் அரசுக்குச் செலுத்துமதியான தனிசொன்றென்றுற்போல முழுமையாக தனித்தனியாகவும் கூட்டாகவும் தகுதிவாய்ந்த நியாயாதிக்கங்கொண்ட ஏதேனும் நீதிமன்றத்தில் அறவிடப்படுதல் வேண்டும்.

குற்றப்பணம் முதலியவற்றின் கொடுப்பனவு முடிவுறும்வரை வள்ளத்தை வைத்திருத்தல்.

22. பதினைந்தாம் அல்லது 16 ஆம் பிரிவின் கீழான தவறொன்றுக்கு வெளிநாட்டு மீன்பிடி வள்ளமொன்றின் தலைவர், சொந்தக்காரர் அல்லது வாடகைக்கமர்த்தியவர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவிடத்து, வள்ளமானது, அதன் மீன்பிடிக் கருவிதளவாடங்கள், சாதனங்கள், களஞ்சியப் பொருட்கள், கப்பற் சரக்கு உட்பட, இழப்பிக்கப்படுதல் வேண்டுமென நீதிமன்றத்தினால் கட்டளையிடப்படாவிடில், செலுத்தப்பட வேண்டுமென நீதிமன்றத்தால் கட்டளையிடப்பட்ட குற்றப்பணம், செலவுத்தொகை

கள், வேறுபணங்கள் என்பவை செலுத்தப்படும் அத்தகைய காலம்வரை வைத்திருக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், குற்றப் பணம் விதிக்கப்பட்ட அல்லது செலவுத்தொகைகளும் வேறு பணங் களும் செலுத்தப்படவேண்டுமெனக் கட்டளையிடப்பட்ட தேதி யிலிருந்து முப்பது நாட்களுக்குள்ளாக முழுக்கொடுப்பனவும் செய்யப்படாவிடின் வள்ளம் விற்கப்படுதலும் வேண்டும்; அத்து டன், அவ்விற்பனையின் விற்றுவரவுகளிலிருந்து குற்றப்பணமும், செலவுத்தொகைகளும் வேறு பணங்களும் அறவிடப்படுதல் வேண்டும்.

இடம்.

**23.** வலுவிலிடு கலமொன்றினால் வெளிநாட்டு மீன்பிடி வள்ள மொன்று கைப்பற்றப்படுதலைத் தொடர்ந்து இச்சட்டத்தின்கீழ்த் தொடுக்கப்படும் ஏதேனும் குற்றவழக்கில், சம்பவமொன்று நிகழ்ந்ததெனச் சார்த்தப்படும் இடம் பிரச்சினைக்குள்ளாகி யிருக்குமிடத்து, வலுவிலிடுகலமொன்றின் சம்பவக்குறிப்பேட்டி லுள்ள அல்லது வேறு உத்தியோகபூர்வமான பதிவேட்டிலுள்ள இயைபான பதிவின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றில் அச்சம்பவம் நிகழ்ந்த இடமெனக் குறிப்பிடப்பட்ட இடம், அதற்கு முரணானது எண்பிக்கப்படும்வரையில், அத்தகைய சம்பவம் நிகழ்ந்த இடமென ஊகிக்கப்படுதல் வேண்டும்.

நீதிமன்றத்தின் நியாயாதிக்கம்.

**24.** இலங்கை நீர்ப்பரப்பில் புரியப்படும் இச்சட்டத்தின் கீழான ஏதேனும் தவறு, மேல்நீதிமன்றத்தின் ஆள்புல நியாயாதிக்கம் பற்றிய வேறேதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வித மிருப்பினும், இலங்கையின் ஏதேனும் நீதிநிருவாக வலயத்தில் அமரும் மேல்நீதிமன்றத்தால் விளங்கப்படற்பாலதாதல் வேண் டும்.

அறிவித்தலை, அழைப்புக்கட்டளையை அல்லது வேறு ஆவணத் தைச் சேர்ப் பித்தல்.

**25.** இச்சட்டத்தின்கீழ்த் தொடுக்கப்பட்ட ஏதேனும் குற்றவழக்கின் அல்லது வேறு நடவடிக்கையின் நோக்கங்களுக்காக, வெளிநாட்டு மீன்பிடி வள்ளமொன்றின் சொந்தக்காரர் மீது அல்லது வாட கைக்கமர்த்தியவர் மீது ஏதேனும் அறிவித்தல், அழைப்புக்கட்டளை, அல்லது வேறு ஆவணம் சேர்ப்பிக்கப்படவேண்டுமெனத் தேவைப் படுத்தப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய வள்ளத்தின் தலைவர்மீது, அல்லது அத்தகைய வள்ளத்தின் சொந்தக்காரரால் அல்லது வாடகைக்கமர்த்தியவரால் நியமிக்கப்பட்ட அதிகாரம்பெற்ற உள்ளூர்ப் பிரதிநிதிமீது நேரில் அல்லது பதிவஞ்சல் மூலம் அது சேர்ப்பிக்கப்பட்டால், அத்தகைய அறிவித்தல், அழைப்புக்கட்டளை அல்லது வேறு ஆவணம் தகுந்தமுறையில் சேர்ப்பிக்கப்பட்டுள்ள தெனக் கருதப்படுதல் வேண்டும்.

ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்கு அமைச்சருக்குள்ள தத்துவம்.

**26.** (1) இச்சட்டத்தின் நெறிகளையும் ஏற்பாடுகளையும் நிறை வேற்றும் நோக்கத்துக்காகவும் அவற்றுக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்துக்காகவும் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) குறிப்பாகவும், (1) ஆம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றியும், பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்காகவும் அல்லது எவற்றிற்காகவும் அல்லது அவை தொடர்பாகவும் அல்லது அவற்றுள் எது தொடர்பாகவும் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :—

(அ) இலங்கை நீர்ப்பரப்பில் மீன்பிடித்தலாகாதெனத் தடை செய்யப்படும்போது, வெளிநாட்டு மீன்பிடி வள்ளங்களின் மீன்பிடிக் கருவிதளவாடங்கள் தொடக்கறுக்கப்பட வேண்டியவிதம் ;

(ஆ) ஆறும் பிரிவின்கீழான ஓர் அனுமதிப்பத்திரத்துக்கான விண்ணப்பங்களுக்கான படிவம், அத்தகைய விண்ணப்பங்கள் கொண்டிருக்கவேண்டிய விபரங்கள், அத்துடன் அத்தகைய விண்ணப்பங்கள் செய்யப்பட வேண்டிய முறை ;

(இ) ஆறும் பிரிவின்கீழ் வழங்கப்படும் அனுமதிப்பத்திரங்களுக்கான படிவங்களும் அவற்றிற்காகச் செலுத்தப்பட வேண்டிய கட்டணங்களும் ;

(ஈ) பின்வருவன தொடர்பான நிபந்தனைகளுட்பட, 6 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்படும் அனுமதிப்பத்திரமொன்றுடன் பிணைக்கப்படவேண்டிய நிபந்தனைகள்:—

(i) மீன்பிடித் தொழிற்பாடுகள் தொடர்பாக, அதிகாரம்பெற்ற உள்ளூர்ப் பிரதிநிதிகள் அல்லது முகவர்கள் அனுமதிப்பத்திரமுடையோரால், இலங்கையில் நியமிக்கப்படுதல் ;

(ii) அனுமதிப்பத்திரத்துடன் பிணைக்கப்பட்ட நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கான முறியும் வேறு தன்மையினவான பிணைப்பொறுப்புகளும் அனுமதிப்பத்திரமுடையோரால் பேணப்படுதல் ;

(iii) அனுமதிப்பத்திரம் எந்த வள்ளம் தொடர்பாக வழங்கப்பட்டதோ அந்த வள்ளத்தினால், அது இலங்கை நீர்ப்பரப்பில் உள்ளபோது, கடைப்பிடிக்கப்பட வேண்டிய தேவைப்பாடுகள் ;

(iv) எந்த வள்ளம் தொடர்பாக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதோ அந்த வள்ளத்தினால் நிறைவேற்றப்பட்ட தரிப்புநிலை, பிடிதொகை, மீன்பிடி முயற்சிகள், ஏற்றிச்செல்லுகை, பதனிடற்ரெழிற்பாடுகள் பற்றிய சம்பவக் குறிப்பேடுகளும் வேறு பதிவேடுகளும் பேணப்படுதல் ;

(v) பிடிதொகை, முயற்சிகள் தொடர்பான புள்ளிவிபரங்கள் உட்பட்ட புள்ளிவிபரமும் வேறு தகவலும் அத்துடன், வள்ளத்தின் தரிப்பு நிலை பற்றிய அறிக்கைகளும் அனுமதிப்பத்திரமுடையோரால் கொடுத்துதவப்படுதல் ;

(vi) எந்த வள்ளம் தொடர்பாக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதோ அந்த வள்ளத்தைக் குறியீடு செய்தலும், அத்தகைய வள்ளத்தின் தளத்தில் வள்ளங்களை அடையாளம் காணுவதற்கும், அவற்றின் இருப்பிடமறிவதற்குமாக இடப்பெயர்ச்சிக் கருவியையும் வேறு சாதனங்களையும், அத்துடன் வள்ளங்கள் தத்தமது தரிப்பு நிலையை நிர்ணயித்துக் கொள்வதற்குப் போதிய கலமோட்டுச் சாதனங்களையும் பொருத்திப் பேணுதலும் ;

(vii) எந்த வள்ளம் தொடர்பாக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதோ அந்த வள்ளத்தில், பயிலுநர்களையும் வேறு ஆளணியினரையும் அமர்த்துவதற்கான வசதிகளை அனுமதிப்பத்திரமுடையோர் ஏற்பாடுசெய்தல் ;

(viii) எந்த வள்ளம் தொடர்பாக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதோ அந்த வள்ளத்தில் இலங்கைப் பிரசைகளைத் தொழிலுக்கமர்த்துதல் ;

(ix) எந்த வள்ளம் தொடர்பாக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதோ அந்த வள்ளத்தில் இலங்கை அவதானிகளை அமர்த்துதல் ;

(x) எந்த வள்ளம் தொடர்பாக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதோ அந்த வள்ளம், இந்தச் சட்டத்தால் அல்லது வேறேதேனும் சட்டத்தால் அளிக்கப்பட்ட தத்துவங்களைப் பின்பற்றி செயலாற்றும் அதிகாரம்பெற்ற அலுவலர்களால் விடுக்கப்படும் பணிப்புகளுக்கு, அறிவுறுத்துரைகளுக்கு அல்லது வேறு தேவைப்பாடுகளுக்கு அமைந்தொழுகுதல்;

(உ) கூட்டுமுயற்சி உத்தேசங்கள் உட்பட கடற்றொழிலில் இடப்படும் வெளிநாட்டு மூலதன முதலீட்டில் இயைந்தொழுகப்பட வேண்டிய நடவடிக்கைமுறைகள் ;

(ஊ) பிடிதொகையைச் சோதனையிடுவதற்காக அல்லது வேறு நோக்கங்களுக்காக வெளிநாட்டு மீன்பிடி வள்ளங்களை எந்த நிபந்தனைகளின்கீழ் இலங்கைத் துறைமுகங்களுள் நுழையவிட வேண்டுமோ அந்த நிபந்தனைகள் ;

(எ) ஆறும் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமொன்றினால் அதிகாரமளிக்கப்படக்கூடிய வெளிநாட்டு மீன்பிடி வள்ளமொன்று, மீன்பிடி நடவடிக்கைகளுக்கும் அதனோடுறவுபட்ட நடவடிக்கைகளுக்கும் இலங்கையின் எந்த நீர்ப்பரப்பைப் பயன்படுத்தக்கூடியதோ அந்த நீர்ப்பரப்பு ;

(ஏ) வெளிநாட்டு மீன்பிடி வள்ளமொன்றை 13 ஆம் பிரிவின்கீழ்க் கைப்பற்றுவதை நிறைவேற்றுகையில் அதிகாரம் பெற்ற அலுவலரால் கடைப்பிடிக்கப்படவேண்டிய நடவடிக்கைமுறைகள் ;

(ஐ) இந்தப் பிரிவின்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதியை மீறுதல் அல்லது அதற்கு இணங்கியொழுகத் தவறுதல், யூரர் சபை இல்லாது அமரும் மேல் நீதிமன்ற நீதிபதி ஒருவரால் விளங்கப்படக்கூடியதும், பத்து இலட்சம் ரூபாவுக்கு மேற்படாத ஒரு குற்றப்பணத்தால் தண்டிக்கப்படக்கூடியதும் இச்சட்டத்தின்கீழானதுமான ஒரு தவறுதல் வேண்டுமென ஏற்பாடு செய்தல் ;

(ஒ) விதித்துரைக்கப்படவேண்டுமென இந்தச் சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வேறேதேனும் கருமம்.

(3) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அந்த ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும், கசெற்றில் வெளியிடப்பட்டபின்னர் இயன்றளவு விரைவாக அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதியெதுவும், அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன் கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி ஒழிக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஏதேனும் ஒழுங்குவிதி எந்தத் தேதியன்று ஒழிக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படுகின்றதோ அந்தத் தேதி பற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

27. கடற்றொழிற் கட்டளைச்சட்டமானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— **(212 ஆம் அத்தியாயமான) கடற்றொழிற் கட்டளைச் சட்டத்தைத் திருத்துதல்.**

(அ) அந்தக் கட்டளைச்சட்டத்தின் 5 ஆம், 6 ஆம், 7 ஆம், 8 ஆம் பிரிவுகளை நீக்குவதன்மூலம் ;

(ஆ) அந்தக் கட்டளைச்சட்டத்தின் 9 ஆம் பிரிவில், " மீன்பிடி வள்ளம் " என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக, அந்தப் பிரிவில் அச்சொல்லமைப்பு எங்கெங்கு வருகின்றதோ அங்கங்கு " உள்ளூர் மீன்பிடி வள்ளம் " என்னும் சொல்லமைப்பை இடுவதன்மூலம் ;

(இ) அந்தக் கட்டளைச்சட்டத்தின் 10 ஆம் பிரிவில் " மீன்பிடி வள்ளம் " என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக " உள்ளூர் மீன்பிடி வள்ளம் " என்னும் சொல்லமைப்பை இடுவதன்மூலம் ;

(ஈ) அந்தக் கட்டளைச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் " மீன்பிடி வள்ளம் " என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக " உள்ளூர் மீன்பிடி வள்ளம் " என்னும் சொல்லமைப்பை இடுவதன்மூலம் ;

(உ) அந்தக் கட்டளைச்சட்டத்தின் 23 ஆம் பிரிவில், அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்குவதன்மூலம் ;

(ஊ) அந்தக் கட்டளைச்சட்டத்தின் 33 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில்—

(i) அந்த உட்பிரிவின் (ஆ), (இ) என்னும் பந்திகளை நீக்குவதன்மூலம் ;

(ii) அந்த உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் " மீன்பிடி வள்ளங்கள் " என்னும் சொல்லமைப்புக்குப்பதிலாக "உள்ளூர் மீன்பிடி வள்ளங்கள்" என்னும் சொல்லமைப்பை இடுவதன்மூலம் ; அத்துடன்

(iii) அந்த உட்பிரிவின் (உ), (ஊ), (எ) என்னும் பந்திகளை நீக்குவதன்மூலம் ; அத்துடன்

(எ) அந்தக் கட்டளைச்சட்டத்தின் 35 ஆம் பிரிவில் —

(i) முறையே " இலங்கையர் ", " இலங்கையர் கம்பனி ", " மீன்பிடி உரிமம் " என்பவற்றுக்கான வரைவிலக்கணங்களை விட்டுவிடுவதன்மூலம் ; அத்துடன்

(ii) " உள்நாட்டு நீர்ப்பரப்பு " என்னும் வரைவிலக்கணத்தை உடனடுத்துப்பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலம் :—

" உள்ளூர் மீன்பிடி வள்ளம் " என்பது 1979 ஆம் ஆண்டின் ........ ஆம் இலக்க, கடற்றொழில் (வெளிநாட்டு மீன்பிடி வள்ளங்களை ஒழுங்குபடுத்தல்) சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருக்கும்.

பொருள்கோடல்.

28. இச்சட்டத்தில், சந்தருப்பம் வேறுவிதமாகத் தேவைப்படுத்தினாலொழிய—

" நீர்வாழ் தாவரம் " என்பது கடற்சாதாழை, ஒளிப்பிளாந்தன் அல்லது வேறு நீர்வாழ் தாவர இனம் எனப் பொருளாகும் ;

" அதிகாரம்பெற்ற அலுவலர் " என்பது கடற்றொழிற் கட்டளைச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட கடற்றொழிற் பரிசோதகர் பதவிவரிசைக்குக் கீழ்ப்படாத எவரேனுமோர் அலுவலர் என, சிற்றலுவலர் பதவிவரிசைக்குக் கீழ்ப்படாத எவரேனும் கடற்படை உறுப்பினர் என, சார்சண்ட் பதவிவரிசைக்குக் கீழ்ப்படாத எவரேனும் வான்படை உறுப்பினர் என, சார்சண்ட் பதவிவரிசைக்குக் கீழ்ப்படாத எவரேனும் பொலிசு அலுவலர் என, அத்

துடன் அமைச்சரினால் அவ்வாறு பெயர்குறித்து அல்லது பதவிகுறித்து எழுத்தில் நியமிக்கப்பட்ட வேறெவரேனும் ஆள் எனப் பொருளாகும் ;

" பணிப்பாளர் " என்பது கடற்றொழிற் கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட கடற்றொழிற் பணிப்பாளர் எனப் பொருளாகும் ;

" பிரதிப் பணிப்பாளர் " என்பது கடற்றொழிற் கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட கடற்றொழிற் பிரதிப் பணிப்பாளர் எனப் பொருளாகும் ;

" மீன் " என்பது மீனினமாயினும்சரி அல்லது இல்லாவிடினும் சரி ஏதேனும் நீர்வாழ் விலங்கு எனப் பொருளாவதுடன், ஏதேனும் ஓட்டுமீன், கிரத்தேசியன், மொலஸ்க், ஒலோதூரியன் அல்லது நீர்வாழ் பாலூட்டிகள் என்பவற்றையும் அவற்றின் குட்டிகள், சிறுமீன், முட்டைகள் அல்லது மீன்முட்டைகள் என்பவற்றையும் உள்ளடக்கும்;

" மீன்பிடித்தல் " என்பது ஏதேனும் முறையில் மீன்பிடித்தல், எடுத்தல் அல்லது கொல்லுதல் அல்லது நீர்வாழ் தாவரங்களைச் சேகரித்தல் எனப் பொருளாவதுடன், மீனைப் பிடிக்க, எடுக்க, அல்லது கொல்ல அல்லது நீர்வாழ் தாவரங்களைச் சேகரிக்க எத்தனித்தல் என்பதையும் உள்ளடக்கும் ;

" மீன்பிடி வள்ளம் " என்பது மீன்பிடி நடவடிக்கைகளுக்கு அல்லது மீன்பிடியோடுறவுபட்ட நடவடிக்கைகளுக்கு அப்போதைக்குப் பயன்படுத்தப்படும் ஏதேனும் கலம் என்று பொருளாகும் ;

" வெளிநாட்டு மீன்பிடி வள்ளம் " என்பது உள்ளூர் மீன்பிடி வள்ளம் தவிர்ந்த ஏதேனும் மீன்பிடி வள்ளம் என்று பொருளாகும் ;

" உள்ளூர் மீன்பிடி வள்ளம் " என்பது 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழிற் சட்டத்தின்கீழ்ப் பதியப்பட்டதும்—

(அ) இலங்கை அரசாங்கத்தினால் அல்லது இலங்கையின் ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் பகிரங்கக் கூட்டுத் தாபனத்தால் முற்றுமுழுதாகச் சொந்தமாக வைத்திருக்கப்படுவதுமான ஏதேனும் மீன்பிடி வள்ளம் என்று ;

(ஆ) இலங்கைப் பிரசையாக உள்ள ஓர் ஆளால் அல்லது இலங்கைப் பிரசைகளாக உள்ள ஒருவருக்கு மேற்பட்ட ஆட்களால் முற்றுமுழுதாகச் சொந்தமாக வைத்திருக்கப்படுவதுமான ஏதேனும் மீன்பிடி வள்ளம் என்று ; அல்லது

(இ) இலங்கைச் சட்டத்தின்கீழ்க் கூட்டிணைக்கப்பட்டதும் அல்லது தாபிக்கப்பட்டதும் அதன் வாக்களிப்புப் பங்குகளில் பெரும்பான்மையானவை இலங்கைப் பிரசைகளின் கையில் உள்ளதுமான ஏதேனும் கம்பனியினால், சங்கத்தினால் அல்லது வேறு ஆட் கழகத்தினால் முற்றுமுழுதாகச் சொந்தமாக வைத்திருக்கப்படுவதுமான எதேனும் மீன்பிடி வள்ளம் என்று,

பொருளாகும் ;

" விதித்துரைக்கப்பட்ட " என்பது இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதியால் விதித்துரைக்கப்பட்ட என்று பொருளாகும் ;

" மீன்பிடியோடுறவுபட்ட நடவடிக்கைகள் " என்பது மீன்பிடி தொடர்பில் வரும்போது,—

(அ) ஏதேனும் வள்ளத்திலிருந்து அல்லது கலத்திலிருந்து மீனை, மாற்றியேற்றுதல் என்று ;

(ஆ) மீன்பிடித் தொழிற்பாடுகளின்மூலம் பெறப்பட்ட மீன்களை அல்லது நீர்வாழ் தாவரங்களைக் களஞ்சியப்படுத்தல், பதனிடல் அல்லது இடம்பெயர்த்தல் என்று ;

(இ) எரிபொருள் மீள்நிரப்புதல் அல்லது மீன்பிடி வள்ளங்களை வழங்குதல், அல்லது மீன்பிடித் தொழிற்பாடுகளுக்கு ஆதாரமான அல்லது துணை நிலையான வேறு நடவடிக்கைகளைப் புரிதல் என்று ;

(ஈ) மேற்கண்டவற்றுள் எவற்றையேனும் செய்வதற்கு எத்தனித்தல் அல்லது ஆயத்தம்செய்தல் என்று,

பொருளாகும் ;

" இலங்கை நீர்ப்பரப்பு " என்பது—

(அ) 1976 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, கடலோர வலயங்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ்ச் செய்யப்பட்ட பிரகடனத்தின்மூலம், இலங்கையின் ஆள்புலக்கடலென வெளிப்படுத்தப்பட்ட பிரதேசம் என்று ;

(ஆ) 1976 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, கடலோர வலயங்கள் சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ்ச் செய்யப்பட்ட பிரகடனத்தின் மூலம் இலங்கையின் அணித்தாயுள்ள வலயம் என வெளிப்படுத்தப்பட்ட பிரதேசம் என்று ;

(இ) 1976 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, கடலோர வலயங்கள் சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட பிரகடனத்தின்மூலம் புறநீங்கலான பொருளாதார வலயம் என வெளிப்படுத்தப்பட்ட பிரதேசம் என்று ;

(ஈ) 1976 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, கடலோர வலயங்கள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட பிரகடனத்தின்மூலம் பாரம்பரிய நீர்ப் பரப்பு என வெளிப்படுத்தப்பட்ட பிரதேசம் என்று ; அத்துடன்

(உ) எல்லாப் பொதுக் குடாக்கடல்கள், ஆறுகள், வாவிகள், கழிகள் (காயல்கள்), கழிமுகங்கள், சிற்றுறுகள், கேணிகள், குளங்கள், குட்டைகள், கால்வாய்கள் என்று, அத்துடன் வேறு எல்லாப் பொது உண்ணாட்டு நீர்ப்பரப்பு என்று அல்லது உள்ளூர் நீர்ப்பரப்பு என்று,

பொருளாகும்.